# இந்தியாவின் கைகள்

# கத்தியும், பூச்செண்டும்

இலங்கை அரசியல் மிகவும் கொந்தளிப்பான ஒரு நிலைக்கு மீண்டும் வந்துள்ளது. ஜனாதிபதித் தேர்தல், அதைத் தொடர்ந்து அந்தத் தேர்தல் பற்றிய குற்றச்சாட்டுகள், இப்போது ஜெனரல் சரத் பொன்சேகாவின் கைது, இந்தக் கைதுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் என அடுத்தடுத்து பரபரப்பான நிகழ்ச்சிகள், பரபரப்பான செய்திகள்.

யுத்தம் முடிந்தாலும் நாடு அமைதிக்கோ வழமைக்கோ திரும்பவில்லை. ஜனநாயகத்தைச் சுற்றி ஆயிரக்கணக்கான கேள்விக்குறிகளே நிற்கின்றன. ஒரு மாதத்துக்குள் ஒரு ஊடகவியலாளர் கடத்தப்பட்டு தகவல் இல்லாத நிலை. இன்னொரு ஊடகவியலாளர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அரசாங்கத்துக்கெதிரான குற்றச்சாட்டுகள், கண்டனங்களோடு தெருவில் இறங்கியிருக்கிறார்கள் சனங்களும் ஊடகவியலாளர்களும்.

வடக்கு கிழக்கிலிருந்த கொந்தளிப்பான நிலைமையும் பரபரப்புகளும் இப்போது தெற்குக்கும் மேற்குக்குமாக நகர்ந்திருக்கிறது. இது இப்படி இன்னும் ஒரு பத்துப் பதினைந்து ஆண்டுகள் தெற்கிலும் மேற்கிலும் நீடிக்கக் கூடும். இந்தக் காலஎல்லை சிலவேளை கூடிக்குறையலாம். ஆனால், இந்த நிகழ்ச்சிப் போக்கில் மாற்றமிருக்காது. இதேவேளை இந்தக் கொந்தளிப்புப் பின்னர் மீண்டும் வடக்கு கிழக்குப் பகுதிக்கு மாறும். ஏனெனில் என்னதான் முயன்றாலும் தமிழர்களின் அடிப்படைப்பிரச்சினைகள் இப்போதைக்குத் தீர்க்கப்படப் போவதில்லை. எனவே அங்கே பிரச்சினையின் தூண்கள் மேலும் பலமாகும். ஆகையால் வடக்குக் கிழக்கில் மீண்டும் கொந்தளிப்புகள் ஏற்படும். இதெல்லாம் இந்தப் பிராந்தியத்தினுடைய தொடர் நிகழ்ச்சியின் வெளிப்பாடாகும்.

சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கையின் அரசியல் நிலைமையை அவதானிப்போருக்கு ஒரு அடிப்படையான விசயம் தெரியும். இலங்கையில் அமைதி ஏற்படுவதற்கு பிராந்திய நாடான இந்தியாவும் சர்வதேச சமூகமும் அனுமதிக்கப்

**இலங்கையின் கொந்தளிப்பான நிலைமைகளுக்கு அதிகமான காரணம் இந்தியாதான். இந்தியாவைப் பொறுத்தளவில், அது இலங்கையில் ஒருபோதும் எந்தப் பிரச்சினையும் தீர அனுமதிக்கப் போவதில்லை. இதற்கான காரணங்கள் பலவுண்டு.**

போவதில்லை என்பது. சுதந்திரம் கிடைத்த பின்வந்த கடந்த அறுபது ஆண்டுகளும் இலங்கை அமைதியில்லாமலே இருந்திருக்கிறது. இனியும் அது அப்படித்தான் இருக்கப் போகிறது. இதுதான் உண்மை. இப்போது நடந்து கொண்டிருக்கும் கொந்தளிப்புகளும் இனிமேல் தொடரப்போகின்ற கொந்தளிப்புகளும் மேலே குறிப்பிட்டதைப் போல ஒரு தொடர் நிகழ்ச்சியின் வெளிப்பாடுகளே. அது இந்திய பிராந்திய ஆதிபத்தியத்தின் விருப்பு வெறுப்புகள், நலன்கள் சார்ந்த நிகழ்ச்சி நிரலின் வெளிப்பாடுகளாகும்.

இலங்கை சுதந்திரமடைந்த 1948லிருந்து முதல் பத்தாண்டுகளுக்குள்ளேயே மிக மோசமான இனவன்முறைக்குள் சிக்கியது. சிக்கியது என்பதைவிட சிக்க வைக்கப்பட்டது என்பதே சரியானது. அதாவது முதற்பத்தாண்டுகளுக்குள்ளேயே இலங்கையின் ஸ்திரத்தன்மை ஆடத் தொடங்கி விட்டது.

அன்றைய இருதுருவ அரசியலில் டி.எஸ்.சேனநாயக்காவின் ஐ.தே.க மேற்குக்குச் சார்பான நிலைப்பாட்டை எடுத்தபோது இந்தியா அதற்கெதிரான பொறிமுறையை உருவாக்கியது. அதன் விளைவு இனமுரண்பாட்டின் உச்ச வடிவமாகியது. பின்னர் இலங்கைத் தீவை இனமுரண்பாட்டின் அடிப்படையில் அது மிகத் தந்திரோபாயமாக இன்றுவரையில் கையாண்டு வருகிறது.

அதேவேளை இனமுரண்பாட்டரசியலில் ஒரு தணிவு நிலை, அல்லது ஓய்வு நிலை வரும்போது தெற்கில் கிளர்ச்சிகள், போராட்டங்கள், மாற்று அரசியல் என்றவாறாக இந்தியா தன்னுடைய கையை நீட்டிக்கொண்டேயிருக்கும். இங்கே தேவைக்கேற்ப களமும் திசையும் மாற்றப் படுகிறதே தவிர பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் அப்படியே இருக்கும். பிரச்சினைகளைப் பராமரிப்பதே இந்த அரசியலின் முக்கிய நோக்கமும் உபாயமுமாகும்.

ஜே.வி.பியின் அரசியலில் சில முக்கியமான சந்தர்ப்பங்களில் இந்தியா அதற்கு ஆதரவளித்தையும் *(ஒரு சந்தர்ப்பத்தில் ஜே.வி.பியின் இன்றைய தலைவர் சோமவன்ச அமரசிங்கவை இந்தியாதான் காப்பாற்றியிருந்தது)* அதைப்போன்று



தமிழ் அரசியலில் அது இன்னும் தன்னுடைய ஆதரவு - எதிர் என்ற இருவகை நிலைப்பாடுகளின் மூலம் தனக்கான சக்திகளையும் பொறிகளையும் வைத்திருப்பதையும் இங்கே மீட்டுப் பார்க்கலாம். (இன்னும் இந்திய ஆதரவுடன் தமிழ்ப் போராளி இயக்கத்தினரும் தமிழ் அரசியலாளர்களும் இந்தியாவின் ஆதரவில் இலங்கையிலும் இலங்கைக்கு வெளியிலும் இந்தியாவிலும் இருப்பதை அவதானிக்கலாம்).

எனவே இந்திய இராசதந்திரத்தின் விளைவாக, இந்த அறுபது ஆண்டுகளும் இலங்கைத் தீவு தொடர்ந்து வன்முறை, போராட்டங்கள், கிளர்ச்சிகள், இரத்தம் சிந்துதல்கள் என்ற கொந்தளிப்பான அரசியல் நிலைமைக்குள்தான் இருந்து வருகிறது. இலங்கை ஸ்திரத்தன்மையுடன் இருக்கும் போது அதனால் தனக்கேற்படும் அபாயங்கள் குறித்த எச்சரிக்கை உணர்வே இதற்குக் காரணம். இந்தியாவை விடவும் இலங்கை என்ன பெரிய சக்தி வாய்ந்த நாடா? என்று யாரும் கேட்கலாம். இங்கே இலங்கை பெரிய நாடா சிறிய நாடா என்பதல்லப் பிரச்சினை. இலங்கையின் கேந்திர முக்கியத்துவமே இங்கே கவனத்துக்குரியது. இந்தக் கேந்திர முக்கியத்துவமே எப்போதும் இலங்கைக்கு அபாயமாகவும் வாய்ப்பாகவும் இருக்கிறது. இந்தக் கேந்திர முக்கியத்துவம் ஏறக்குறைய மேற்காசியாவில் பலஸ்தீனத்துக்கு நிகரானது. எனவேதான் இரண்டு மையங்களிலும் பிராந்திய - சர்வதேச சக்திகளின் ஆதிக்கமும் நெருக்குவாரங்களும் அளவுக்கதிகமாக இருக்கின்றன.

இலங்கையின் கொந்தளிப்பான நிலைமைகளுக்கு அதிகமான காரணம் இந்தியாதான். இந்தியாவைப் பொறுத்தளவில், அது இலங்கையில் ஒருபோதும் எந்தப் பிரச்சினையும் தீர அனுமதிக்கப் போவதில்லை. இதற்கான காரணங்கள் பலவுண்டு. சந்தை வாய்ப்புத் தொடக்கம் புவியியல் நலன்வரையில் ஏராளம் அம்சங்கள் இதில் தங்கியிருக்கின்றன. இலங்கை பலமான ஒரு நிலைக்கு தன்னை ஸ்தாபித்துக் கொள்ளுமெனில், அது தன்னிச்சையாக, தனக்குப் பொருத்தமான - விருப்பத்துக்குரிய வெளிச் சக்திகளைத் தேர்ந்து கொள்ளும். இலங்கையின் கேந்தர முக்கியத்துவம் மேற்குக்கும் தேவையானது. சீனாவுக்கும் தேவையானது. என்பதால் இந்தப் போட்டியில் அது தன்னை விரைவாக பலமாக ஸ்தாபித்துக் கொள்ள அதிக வாய்ப்புண்டு. இது ஏறக்குறைய இஸ்ரேலுக்கு நிகரான ஒரு பாத்திரத்தை இலங்கை வகிப்பதாகி விடும்.

அரபுலகத்தின் மத்தியில் அடங்காத் திமிரோடு இஸ்ரேல் இருப்பதை இங்கே ஒரு தடவை நாம் நினைவிற்குக் கொண்டு வந்தால் இதன் தாற்பரியத்தைப் புரிந்து கொள்ளலாம். ஆகவேதான், இலங்கை விவகாரத்தில் எப்போதும் மிக விழிப்பாக இந்தியா இருக்கிறது. இலங்கைக்கான தூதுவர்களை இந்தியா நியமிக்கும் போதே மற்ற இடங்களுக்கான தூதுவர்களை விடவும் கூடிய ஆற்றலாளர்களையும் முக்கியமான வர்களையும் கவனத்திற்கொள்வது வழமை. ஜே.என்.டிக்ஸிற் தொடக்கம் அலோக் பிரசாத் வரையில் இதை அவதானிக்கலாம்.

இந்தியாவுக்கு சீனாவும் ஆபத்தான சக்தி. மேற்குலகமும் ஆபத்தானதே. இன்றைய அரசியல் பொருளாதார நிலைமைகளின் நிமித்தம் அது இந்த நாடுகளுடன் ஒரு சமரசத் தன்மையைக் கடைப்பிடித்தாலும் பிராந்தியத்தில் தன்னுடைய ஆதிக்கத்தை இழப்பதற்கோ பிற சக்திகளுக்கு விட்டுக் கொடுப்பதற்கோ அது ஒரு போதும் விரும்பமாட்டாது. எனவே தான், இந்தியாவை தமிழர்கள் கையாள்வதன் மூலம் தமிழ் மக்களின் நலனையும் பெறலாம். இந்திய நலனும் பாதுகாக்கப்படும் எனச் சில ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். (இது எவ்வளவுக்குச் சாத்தியமானது என்பது வேறு விசயம்).

இத்தகைய நிலைமைகளின் பின்னணியில், இலங்கையை கொந்தளிப்புக்குள்ளாக்கிப் பலவீனப்படுத்தித் தனது நிழலின் கீழ் வைத்திருக்க இந்தியா தொடர்ந்து முயல்கிறது. அது முடியாதபோது அது கொஞ்சம் கூடுதலான அழுத்தத்தைக் கொடுக்க முயற்சிக்கிறது. ராஜீவ் காலத்தில் இந்தியா அத்த

– கிருஷ்ணமூர்த்தி அரவிந்தன் –

(18ம் பக்கம் பார்க்க)